## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( நநி4) துறை அரசு ஆணை (நிலை) எண். 92, நாள். 03.07.2007–ன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள 24 கடைகளை, ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டும் 15 சதவீகிதம் உயர்வு செய்து மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தல் செய்து 9 ஆண்டுகளுக்கு கடையை நடத்திக் கொள்ள மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 11.01.2019 அன்று நடைபெற்றது. மேற்படி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி மற்றும் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய கீழ்க்கண்டுள்ள நபர்களுக்கு ஏலம் உரிமம் வழங்க தனிஅலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | பெயர் | பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வியாக மாத வாடகை கோரியது | வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த கேள்வியாக மாத வாடகை கோரியது. | எத்தனையாவது ஏலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | புன்செய்ப் புளியம்பட்டி பேருந்து நிலைய வியாபாரிகள் சங்கம் | - | 8700 | 32 |
| 2 | 2 | பாண்டியராஜன் | - | 8700 | 27 |
| 3 | 3 | பாண்டியராஜன் | - | 8700 | 27 |
| 4 | 4 | பி. ஆர். ஆனந்தவேல் | - | 8700 | 11 |
| 5 | 5 | பி. ஆர். ஆனந்தவேல் | - | 8750 | 10 |
| 6 | 6 | எஸ். மணிகண்டன் | - | 8800 | 10 |
| 7 | 7 | கே. ரவி( மாற்றுத்திறனாளி) | - | 7700 | 10 |
| 8 | 8 | ஏ.ஜாகீர் உசேன் | - | 8850 | 11 |
| 9 | 9 | ஜி.தினேஷ்குமார் | - | 8700 | 10 |
| 10 | 10 | கே. வி. ஞானவடிவேல் | - | 9100 | 10 |
| 11 | 11 | அ. யுவராஜ் | 9000 | - | 10 |
| 12 | 12 | பி.வெங்கடாசலபதி | 9400 | – | 10 |
| 13 | 13 | எம். கோபாலகிருஷ்ணன் | - | 9000 | 10 |
| 14 | 18 | கா. கிருஷ்ணசாமி | - | 8800 | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | 19 | கே.வி. செல்வராஜ் | - | 8700 | 10 |
| 16 | 20 | எம். கோகிலா | - | 8750 | 32 |
| 17 | 21 | என். முருகேசன் | - | 8800 | 10 |
| 18 | 22 | எஸ்.கே.சீனிவாசன் | - | 8750 | 10 |
| 19 | 24 | எஸ்.தாமோதரசாமி BA BL | - | 8700 | 32 |
| 20 | 25 | ஜெ.செக்கீனா | - | 8750 | 32 |
| 21 | 26 | காலி | - | - | - |
| 22 | 27 | PGS Bus Transport<br>த. குமரசெந்தில்ராஜா | - | 8750 | 10 |
| 23 | 28 | கே. வி. ஞானவடிவேல் | - | 8700 | 32 |
| 24 | 29 | கே. வி. ஞானவடிவேல் | - | 8700 | 27 |
| 25 | 30 | கே. கார்த்திக் | - | 8700 | 10 |
| 26 | 31 | காலி | - | - | - |
| 27 | 32 | காலி | - | – | – |

**அலுவலகக்குறிப்பு :**

1.இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு புதியதாக கட்ட கடந்த 30.12.2013 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பேருந்து நிலைய வளாகத்தில் 34 எண்ணிக்கையிலான கடைகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு, மேற்படி பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு கடந்த 08.06.2015 அன்று திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் கட்டி முடிக்கும் முன்னரே கடந்த 02.09.2014 அன்று உத்தேச கடைகளுக்கு அவற்றின் அமைவிடத்திற்கேற்ப குறைந்தபட்ச வாடகை ரூ.10100/- முதல் அதிகபட்ச வாடகை ரூ.17100/- என ஏலதாரர்கள் பகிரங்க ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் எடுத்து கடந்த 28.08.2015 முதல் ஒப்படைக்கப்பட்டு தொடர்ந்து கடைகளை ஓராண்டு காலம் நடத்தி வந்த நிலையில் போதிய அளவு கடைகளில் வருவாய் ஈட்ட இயலாதபடியால் 14 எண்ணிக்கையிலான கடைகளை ஏலதாரர்கள் மீண்டும் நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டனர். இக்கடைகள் கடந்த 03.08.2016 முதல் பலமுறை பகிரங்க ஏலம் அறிவிப்பு செய்தும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் ஏலத்தில் யாரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. ஏனெனில் பேருந்து நிலைய கடைகளை முதன் முறையாக ஏலம் விடப்படும் போது, கடைகள் முழுமையாக கட்டி முடிக்காததால் பொதுப்பணித் துறையிடமிருந்து வாடகை நிர்ணய மதிப்பு பெறப்படவில்லை. மேலும்,

அருகிலுள்ள வெளி மார்க்கெட் கடைகளின் வாடகை விபரங்களை ஒப்பு நோக்கப்படாமல் நிர்ணயிக்கப்பட்டு ஏலதாரர்கள் கடைகள் கிடைக்காது என்ற அச்சத்தில்போட்டியின் காரணமாக அதிகமான வாடகைக்கு எடுத்துள்ளனர்.

இந்நிலையில் மேலும், 20.08.2018 மற்றும் 14.09.2018 ஆகிய தேதிகளில் 16 கடைகளுக்கு மூன்றாண்டு குத்தகைக் காலம் முடிவடைவதால், இக்கடைகளை புதுப்பித்துக் கொள்ள அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் எவரும் புதுப்பித்துக்கொள்ள முன்வரவில்லை. இக்கடைகளுக்கு மூன்றாம் ஆண்டுக்கான வாடகை தொகை செலுத்தாமல் கடை ஏலதாரர்களின் வைப்புத் தொகையில் ஈடு செய்து கொள்ளுமாறு 01.04.2018 அன்று மனு அனுப்பி உள்ளனர். மேற்படி கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கடந்த ஜூன் 2018ம் மாத முதல் 8 மாதங்களாக தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இதில் 16 நபர்கள் மட்டும் கலந்து கொண்டு மிக குறைந்த வாடகைத் தொகைக்கு ஏலம் கோரியுள்ளனர். மேற்படி 34 கடைகளில் தற்போது 29 கடைகள் பூட்டப்பட்டுள்ளதால், நகராட்சிக்கு தொடர்ந்து நிதியிழப்பு ஏற்பட்டு வருகின்றது.

மேலும் ஈரோடு மாவட்ட ஆட்சியரின் 10.06.2018 அன்றைய நேரடி ஆய்வில் நகராட்சி பேருந்து நிலையத்தில் கட்டி முடிக்கப்பட்ட கடைகள் நீண்ட நாட்களாக காலியாக உள்ளதால் வருவாய் இழப்பு ஏற்படுவதை சுட்டிக் காட்டி உரிய நடவடிக்கை மேற்கொள்ள நடைமுறையில் உள்ள விதிகளை பின்பற்றியும், பொதுப்பணித்துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச வாடகைக்கு குறைவு இல்லாமலும் வாடகை மதிப்பை நிர்ணயம் செய்து ஏலம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.20503/2018/பஆ12 நாள்.20.07.2018ல் அறிவுறுத்தியுள்ளதனை தொடர்ந்து 29 கடைகள் ஏலம் விடும் பொருட்டு பத்திரிக்கை விளம்பரப் பலகைகள், ஆட்டோ விளம்பரம், அறிவிப்பு சார்பு செய்தும் பல வழிகளில் ஏல விளம்பரம் செய்தும் மிகக் குறைவான நபர்களே கலந்து கொண்டு மிகக் குறைவான தொகைக்கு ஏலக் கேள்வி கோரி வந்தனர். இந்நிலையில் பொது ஏல குழுவின் மூலம் குறைந்தபட்ச வாடகையை நிர்ணயம் செய்து வழங்கக் கோரி பொதுப்பணித்துறையின் தற்போதைய வாடகை மதிப்பு மற்றும் நகராட்சி கடைகளுக்கு அருகில் தற்போது நிலவி வரும் மார்க்கெட் மதிப்பு ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியலுடன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களுக்கு 18.09.2018 தேதியில் கடிதம் அனுப்பப்பட்டது.

அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 14.11.2018-ம் தேதிய செயல்முறைகள் ( ந.க.எண்.1842/2014/அ3, நாள்.14.11.2018 ) ஆணையின்படி இந்நகராட்சியின் பேருந்து நிலையக் கடைகளுக்கு தற்போதைய அங்காடி மதிப்பீட்டின்படி மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகையை சரிபார்த்து குழுவானது ஒரு வார காலத்திற்குள் எழுத்து பூர்வமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையிடப்பட்டது.

அதன்படி மேற்படி குழுவானது 06.12.2018 அன்று இந்நகரட்சியின் பேருந்து நிலையத்தில் பூட்டப்பட்டுள்ள கடைகளை அளவீடு செய்தும், தனியார் கடைகளின் அளவீடு, வாடகை நிலவரம் ஆகியவற்றினை ஆய்வு செய்தனர். அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் 10.12.2018 நாளிட்ட கடிதத்தில் தங்களது 18.09.2018 நாளிட்ட விண்ணப்பம்

பரிசீலிக்கப்பட்டதில் தங்கள் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய கடைகளுக்கு 3 ஆண்டுகள் மட்டுமே முடிவடைந்தமையால் 3 ஆண்டு முடிவடைந்த கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசு விதிகளை பின்பற்றி நகராட்சி ஆணையரே நடவடிக்கை மேற்கொள்ளலாம் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1842/2014/அ3, நாள்.10.12.2018-ல் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட சூழ்நிலையில் தொடர்ந்து பேருந்து நிலைய கடைகள் பூட்டப்பட்டுள்ளதால், நகராட்சிக்கு தொடர்ந்து நிதியிழப்பு ஏற்பட்டு நகராட்சி பணியாளர்களுக்கு ஊதியம், மின் கட்டணம், வாகன எரிபொருள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றிற்கு நிதியில்லாமல் நகராட்சி நிர்வாகம் மிகவும் கடினமான சூழ்நிலைகளை சந்தித்து வருவதால், இவற்றினை சரி செய்யும் பொருட்டு பொதுப்பணித்துறை மதிப்பு மற்றும் வெளிச்சந்தை மதிப்பு இவற்றினை ஒப்பு நோக்கி இவற்றில் அதிகமாக உள்ள பொதுப்பணித்துறை மதிப்புடன் கூடுதலாக 15 சதவீதம் உயர்வு செய்து அதனை அதனை குறைந்தபட்ச அடிப்படை வாடகையாக கொண்டு ஏல விதிமுறைகளை பின்பற்றி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. எனவே குறைந்தபட்ச அடிப்படை வாடகையை காட்டிலும் உயர்ந்தபட்ச கேள்வி கோரிய கடைகளுக்கு தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு உரிமம் வழங்க தீர்மானிக்கலாம்.

**2)** கடை எண். 1 முதல் 10 வரை மற்றும் 13,18,19,20,21,22,24,25,27,28,29 மற்றும் 30 ஆகிய 22 கடைகளுக்கு மூடி முத்திரையிட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய நபர்களுக்கு ஏல உரிமம் வழங்கலாம்.

3) கடை எண். 11 மற்றும் 12 ஆகிய கடைகளுக்கு உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கோரிய நபர்களுக்கு ஏல உரிமம் வழங்கலாம்.

4) கடை எண். 26,31 மற்றும் 32 ஆகிய கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரப்படாததால் இக்கடைகளுக்கு மறு ஏலம் நடத்தலாம்.

(ந.க.எண்.1135/2015/அ1)

**தீர்மான எண் : 923**
**தீர்மானம் : தொடர் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜனவரி 2019 மாதத்திய நாட்குறிப்பு தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** தனி அலுவலர் பார்வையிடலாம்.

(ந. க. எண். 195/2017/அ1)

**தீர்மான எண் :** 924

**தீர்மானம் :** நகராட்சி ஆணையாளரின் ஜனவரி 2019 மாத நாட்குறிப்பு பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான அண்ணாமலை நகர் பகுதியிலுள்ள பூங்கா இடத்தைச் சுற்றிலும் வேலி அமைக்கவும், அதற்கான செலவினம் ரூ.1.55 இலட்சத்திற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 925
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான திருமகள் நகர் பகுதியிலுள்ள பூங்கா இடத்தைச் சுற்றிலும் வேலி அமைக்கவும், அதற்கான செலவினம் ரூ.1.10 இலட்சத்திற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 926
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்படுவதால் அலுவலகப்பணிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. எனவே அலுவலக அன்றாட தேவைக்கு UPS அத்தியாவசியமாக தேவைப்படுவதால் அதனை வாங்கவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 927
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019—ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிகுச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையம், அண்ணா நகர் நீருந்து நிலையம், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திறந்தவெளி மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் ஆகிய இடங்கலிலுள்ள மின் மோட்டார்களை 2019-2020-ம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், ரூ.8.00 லட்சம் உத்தேச செலவினத்திற்கும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் : 928**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிகுச் சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையம், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குடிநீர் விநியோக குழாய்கள், வால்வுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து விநியோகிக்கும் குழாய்கள் ஆகியவற்றை 2019-2020-ம் ஆண்டு பராமரிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8.00 லட்சத்திற்கும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் : 929**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொறியாளரின் அன்றாட பணிகள் மற்றும் புள்ளி விவரங்களை ஆய்வு செய்ய கூடுதல் திறனுடன் கூடிய கணிப்பொறி வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.65,000/–க்கும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் : 930**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், அண்ணா நகர் நீருந்து நிலையம் மற்றும் மேல்நிலைத் தொட்டிகளில் 2019-2020-ம் ஆண்டிற்கு குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு ப்ளீச்சிங் பவுடர் மற்றும் ஆலம் வாங்கவும் அதற்கான செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை ஏற்கலாம்.

**தீர்மான எண் : 931**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண். 23–ன் குத்தகை காலம் 15.9.2015 முதல் 14.9.2018 உடன் 3 ஆண்டு குத்தகை காலம் முடிவடைந்துவிட்டால், மேலும் 3 ஆண்டு காலத்திற்கு நீட்டிக்காமல், கடையை நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டதால், மேற்படி கடையை மறு ஏலத்திற்கு கொண்டு வந்து 24.8.18 அன்று மறு ஏலத்தில் 1.9.2018 முதல் திரு. எஸ். ஜெயகாந்தன் என்பவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, விண்ணப்பதாரர் திரு.இப்ராம்ஷா செலுத்திய வைப்புத் தொகை ரூ.48205/– காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடட்டில் உள்ளதால், இத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 932
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( நநி4) துறை அரசு ஆணை (நிலை) எண். 92, நாள். 03.07.2007–ன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.5B மற்றும் வாரச்சந்தை வணிக வளாக குடோன் எண்.5 ஆகிய இரு கடைகளை ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டும் 15 சதவீகிதம் உயர்வு செய்து மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தல் செய்து 9 ஆண்டுகளுக்கு கடையை நடத்திக் கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 11.01.2019 அன்று நடைபெற்றது. மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி மற்றும் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய கீழ்க்கண்டுள்ள நபர்களுக்கு ஏலம் உரிமம் வழங்க தனிஅலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை விவரம் | ஏலதாரர் / ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வியாக மாத வாடகை கோரியது | வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த கேள்வியாக மாத வாடகை கோரியது. |
|---|---|---|---|---|
| 1 | ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.5B | ஆர்.சிவராமன் | 18100 | - |
| 2 | வாரச்சந்தை வணிக வளாக குடோன் எண்.5 | ஆர்.மாரிமுத்து | - | 7500 |

**அலுவலகக்குறிப்பு :**

1) மேற்படி கடைகளின் 3 ஆண்டு குத்தகை காலம் 31.03.2019 உடன் முடிவடைவதால் இக்கடையை நடத்த இயலாது என முந்தைய குத்தகைதாரர்கள் நகராட்சி வசம் கடையை ஒப்படைப்பு செய்துவிட்டதால் இக்கடைகளை 11.01.2019 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் முந்தைய வாடகை தொகையில் 15 சதவீதம் உயர்வு செய்து ஏலம் விடப்பட்டது.
   இதில் வரிசை எண்.1ல் தெரிவிக்கப்பட்டுள்ள கடைக்கு உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி கோரிய நபர்களுக்கு ஏல உரிமம் வழங்கலாம்.
2) இதில் வரிசை எண்.2ல் தெரிவிக்கப்பட்டுள்ள கடைக்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்த நபருக்கு ஏல உரிமம் வழங்கலாம்.
3) ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.1,4,5A,10,11,13,15,16,17,19,22,26,27,28
   எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள். 5,6,7,10,11,12,13
   திரு.வி.க.திடல் வணிக வளாக கடைகள்.3.6,7,8,10
   பேருந்து நிலையத்தில் பேருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமம்
   மேற்படி இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரவில்லை. இதற்கு மறு ஏலம் கோர தனிஅலுவலரின் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1135/2015/அ1)

**தீர்மான எண் : 933**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி **2018–19** ன் கீழ் பணி மேற்கொள்ள **20.11.2018** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் வர்ணம் பூசுதல், பயணிகளுக்கான இருக்கை அமைத்தல், இலவச கழிப்பிடத்தில் நீர் வசதி, பேருந்து கால அட்டவணை பலகை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல் | **2.00** இலட்சம் | திருமதி.புனிதவதி புன்செய்ப் புளியம்பட்டி | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி.ஜெயராஜ் புன்செய்ப் புளியம்பட்டி | **0.01%** மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருமதி.புனிதவதி, புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
**(ந.க.எண். 1066/15/அ1)**

**தீர்மான எண் : 934**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி **2018–19** ன் கீழ் பணி மேற்கொள்ள **26.09.2018** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விழுக்காடு** |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான தினசரி காய்கறி சந்தையின் நுழைவு வாயில்களில் இரும்பு கேட் அமைக்கும் பணி. | 1.00 இலட்சம் | திரு.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி | 0.20% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி.புனிதவதி புன்செய்ப் புளியம்பட்டி | 0.71 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திரு.சிதம்பரம்,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

(ந.க.எண்.678/18/இ1)

**தீர்மான எண் : 935**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 23.01.2019–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

# PUNJAI PULIAMPATTI MUNICIPALITY WATER SUPPLY BYE-LAWS

[ந.க.எண்.487/2018/ இ1, நாள்21.01.2019]

## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி குடிநீர் விநியோக துணை விதிகள்

## 1920ம் ஆண்டின் திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் படி செய்யப்படும் அறிவிப்பு

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியிலுள்ள வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க 1920ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 130, 131(1), (2), (3), 132, 132ஏ, (1), (2), 133, 134, 135, 306, 307, 308, 309 மற்றும் 311 பிரிவுகளின் கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்.

By Laws framed under section 130, 131(1) (2) (3), 132, 132A (1) (2), 133, 134, 135, 306, 307, 308, 309 and 311 of Tamil Nadu District Municipalities Act 1920 (Revised) for Provision of drinking water supply connections to the house and other buildings located within the limits of the Punjai puliampatti Municipality.

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் புதியதாக வீட்டுக் குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இனங்களும் அடங்கும். இந்த விதிகளின் கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் உபயோக அளவை கணக்கிடவும், குடிநீர் குழாய் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர் குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்த துணை விதிகளில் இடம் பெறுகின்றன. புதிய துணை விதிகள் மற்றும் உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணங்கள் 01.07.2019 முதல் அமுலுக்கு வருகின்றது.

These bye-laws contain grant of water supply connection, subsequent changes in the said connections, attending repairs and maintenance, etc. Provisions are also made in the bye-laws for prevention of wastage of drinking water assessment of the accurate quantity of water consumed through each connection, fixing of meters, construction of storage pits and also provision for fire hydrant purposes. New Bye Laws and revised water charges will come in to force with effect from 01.07.2019.

1. குடிநீர் இணைப்பு பெறுவதற்காக 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் துணை விதிகள் 131 (1) வது பகுதி (அ) 132வது விதிகள் மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தை கட்டிட

Application for the House Service Connection under sub section 1(A) of section 131, section 132 of the Tamil Nadu District Municipalities Act (Revised) 1920 as amended, every owner of the house or its occupier with the consent letter of the

உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) மற்றும் மதிப்பீடு தயார் செய்து, பதிவு கட்டணம் ரூ.100/–. (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி விண்ணப்பம் வழங்கப்படும். மேலும், குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீட்டு கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும். பதிவுக்கட்டணம் எக்காரணம் கொண்டும் திரும்ப வழங்கப்படமாட்டாது.

owner is mandated to send an application in form A for getting house connection accompanied by an estimate for the provision of water connection. Such owner or occupier should also remit a registration fee of Rs.100 and send the application along with the particulars of remittance, to the Commissioner of the Municipality. The application will be duly entered according to the date of receipt of the same and the house connections will be given according to seniority. Such applicant should also remit such amount of deposit and estimate amounts as fixed by the Municipality. The Registration fee will not be refunded on any account.

(அ) குடிநீர் இணைப்பிற்காக தயாரிக்கப்படும் மொத்த மதிப்பீட்டில் 20 சதவிகிதம் சென்டேஜ் கட்டணம் மற்றும் ஆய்வு கட்டணமாகவும் அல்லது குறைந்த அளவு ரூ.750/– வசூலிக்கப்படும்.

A. 20% on the overall estimate amount for the provision of drinking water connection will be collected as centage and inspection charges or Rs.750/- will be collected as minimum charge.

(ஆ) குடிநீர் திட்டத்தில் அரசு கட்டிடங்களுக்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்த வேண்டியதில்லை. இணைப்பு உத்தரவு பெற்ற பின்பு செலுத்த வேண்டும்.

B. For drinking water supply connection in respect of Government Building, it is not necessary to remit the deposit and other amounts in advance. They shall be remitted after the issue of permission for the connection.

(இ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத் தொகை தவிர இதர கட்டணங்கள் எதுவும் திருப்பித்தரப் படமாட்டாது. செலுத்திய தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

C. Except for deposit amount the charges collected will not be refunded. The deposits also will not carry any interest.

ஈ) குழாய் இணைப்பு பணிகளை உரிமையாளரே தகுதி வாய்ந்த குழாய் பொருத்துநரால் தனது சொந்தச் செலவில் நகராட்சி பகிர்மானக்குழாய் வரை அமைக்கப்பட வேண்டும்.

D. The house connection work should be undertaken by the House owner himself by employing qualified plumber at their own cost, and such work should be done up to distribution main.

2. குடியிருப்பு உபயோகத்திற்கு மற்றும் குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கு வழங்கப்படும் இணைப்புகளுக்கு அளவு மானிகள் பொருத்தப்பட்டு சதுர அடி முறையில் கட்டணங்கள் வசூல் செயயப்படும். ஏற்கனவே அளவு மானி பொருத்தப்படாமல் குழாய் அளவு விகிதத்தில் (Tap rate) உள்ள இணைப்புகளுக்கு 60 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

2. In the case of new water supply connections for residential or non-residential purposes, meters will be fixed and as per the meter reading showing the quantity of water consumed, charges will be collected. For the existing water supply connections where no meter is fixed and charges are collected on tap rate basis, a notice will be issued informing the consumer to get meter fixed up within 60 days and the water supply connection will be charged under meter category Non-compliance will lead to disconnection of water supply without any further notice.

3. வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோக காரியங்களுக்கானதா அல்லது வீட்டு உபயோக காரியங்களுக்கல்லாததா என்பது பற்றி திருத்தப்பட்டுள்ள 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 131வது பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரைகளின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

3. Whether a connection is for domestic or non-domestic purposes will be decided in each case as per explanation given under Section 131 of Tamil Nadu District Municipalities Act 1920

4. (அ) ஒரே இணைப்பின் வாயிலாக வீட்டு உபயோக பயன்களுக்கும் அவையல்லாத பிற பயன்களுக்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் வீட்டு

4. i) If through a single connection water is drawn for domestic as well as non-domestic purposes, the charges pertaining

உபயோகம் அல்லாத பிற பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும். சொத்துவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட வேண்டிய இனங்களுக்கு மன்ற அனுமதியுடன் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

(ஆ) ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய நிறுவனங்களுக்கு கொடுக்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கும் கட்டிடங்களின பரப்பளவுக்கேற்ப குறிப்பிட்டுள்ள விலை விகிதங்களின் வைப்புத்தொகை மற்றும் கட்டணங்கள் வசூல் செய்யப்படும். மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீருக்கான காரியங்களை பொறுத்து வீட்டு உபயோக பயன் மற்றும் அவையல்லாத பிற பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

(இ) சொத்துவரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை கட்டும் போதோ அலலது பழுதுகள் பார்க்கும்போதோ நகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டது ஆணையர் கண்டுபிடித்தால் குடியிருப்பு அல்லாத உபயோகமாக கருதப்பட்டு அதன வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

4 (ஈ). தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் அனுமதியுடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறுகளுடன் நகராட்சி மன்றம் தமது நகராட்சி எல்லைக்குட்படாத யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

to non-domestic purposes will be collected.

For buildings exempted from Property Tax, Water supply connection will be given if permitted by the Municipal Council

ii) Even in the case of buildings owned by the Municipality, such water connections will have only meter reading devices but also appropriate rates of charges will be collected depending upon the domestic or non-domestic use of water by such establishments.

iii) Houses for which property tax are not levied will not be given water supply connection. In cases where the houses were already having water supply connection, and the present structure is demolished and fresh construction and carried out (or) when additional constructions are undertaken to the existing structure (or) when major repairs are being carried out and if the Municipality water was used or presumed by the Commissioner that it was used for such construction it will be construed that the water has been used for non-domestic purposes and the rates applicable the Commercial purpose will be levied and collected.

iv) The Municipal Council may supply water to any local body or other private person outside the local of its jurisdiction, with the consent and approval of the Chief Engineer, Office of Commissioner of Municipal Administration, following the conditions, prescribed by him.

5. ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர் குழாய் இணைப்பு மட்டும்தான் வழங்கப்படும். அத்தகைய இணைப்பை கட்டுப்படுத்த நீர்வரத்து கட்டுப்பாட்டு மானி (Flow Control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப் படவிருக்கும் பயன் இணைப்புகளில் இருந்தோ குடிநீர் வழங்கப்படமாட்டாது.

5. A) Each residential building will be given only one water supply connection. To control the flow of water Ferrules Flow Control Valve and such other closure devices will be fitted. Water will not be supplied from any other ex nearby residential water connections or from the proposed “User Connections”.

விளக்கவுரை :

இத்துணை விதிகளில் இடம் பெறும் ‘‘வீடு’’ எனும் சொல் ஒரே பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைக்கு சொத்துவரிக்காக ஒரே பகுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தையோ குறிக்கும்.

**Explanation :**

The word ‘Residential’ (house) mentioned in these bye-laws means a portion of a building or buildings treated as a single unit for the purpose of levying property tax

ஆ. அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான இணைப்பு

New House Service connections for multi-storied apartments.

அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்பு மட்டும் கீழக்கண்டவாறு வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நான்கு குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 1 எண் |
| 2. | 5 முதல் 8 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 2 எண்கள் |
| 3. | 9 முதல் 12 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 3 எண்கள் |
| 4. | 13 முதல் 16 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 4 எண்கள் |
| 5. | 17 முதல் 20 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 5 எண்கள் |

For multi-storied apartment buildings connection given shall be of proper size depending upon the no. of dwellings as follows :-

| | | | |
|---|---|---|---|
| 1. | For 4 Flats | 20 mm pipe 15 mm ferrule | 1 No. |
| 2. | 5 to 8 Flats | 20 mm pipe 15 mm ferrule | 2 Nos. |
| 3. | 9 to 12 Flats | 20 mm pipe 15 mm ferrule | 3 Nos. |
| 4. | 13 to 16 Flats | 20 mm pipe 15 mm ferrule | 4 Nos. |
| 5. | 17 to 20 Flats | 20 mm pipe 15 mm ferrule | 5 Nos. |

| | | | |
|---|---|---|---|
| 6. | 21 முதல் 40 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 6 எண்கள் |
| 7. | 41 முதல் 70 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 7 எண்கள் |
| 8. | 70 குடியிருப்பு–களுக்கு மேல் | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 8 எண்கள் |

| | | | |
|---|---|---|---|
| 6. | 21 to 40 Flats | 20 mm pipe<br>15 mm ferrule | 6 Nos. |
| 7. | 41 to 70 Flats | 20 mm pipe<br>15 mm ferrule | 7 Nos. |
| 8. | Above 70 Flats | 20 mm pipe<br>15 mm ferrule | 8 Nos. |

அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக வரிவிதிப்பு செய்து அனைத்து குடியிருப்போரிடமும் தனித்தனியாக வைப்புத் தொகை மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படும்.

A separate property assessment should be levied for each flat and separate estimate amount should be remitted. But a separate property tax assessment should be attained for each flat of the building.

6. இந்து கோவில்கள், மசூதிகள், மாதா கோவில்கள் ஆகியவற்றிற்கு கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே, குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டால் வணிக பயன்பாட்டில் கட்டணம் வசூலிக்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகள் கீழ்க்கண்டவாறு வரைமுறைப்படுத்தப்படும்.

6. In respect of water connections to temple, mosque and churches, the water must be used for drinking only. If the water is used for other than drinking purpose, water charges will be collected to commercial rate.

(அ) இந்து கோவில்கள், மசூதிகள், மாதா கோவில்கள் ஆகியவற்றிற்கு கொடுக்கப்படும் குடிநீர் இணைப்பிற்கு வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்பு விதிகள் இதற்கும் பொருந்தும்.

a) For big temples, Mosques, Churches etc., the water supply shall strictly be for drinking purpose only and the bye laws will be applicable to Domestic tariff.

7. இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர் குழாய்களில் உள்ள நீர் விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளில் அளவு, அவற்றில் பொருத்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும், குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர் நிர்ணயம் செய்வார். அதற்கு தக்கபடி கீழ்கண்டவாறு நிர்ணய அளவுகள் அமைக்கப்படும்.

7. Subject to the above bye-laws, the Engineer or his authorised official will determine the measurement of the Valves Ferrules Taps to be fixed in the water connections and also the length of the pipes. This will depend upon the flow of water in the main pipe line and the force and water pressure. Such measurements and other fixtures according to the following proportions:-

(1) 15 எம்.எம். குழாய் இணைப்பு –10 எம்.எம். திருகு குறுங்குழாய் (30 மீட்டர் நீளம் வரை)

i) 15mm pipe connection 10 mm Ferrules (Upto 30 metre length)

(2) 20 எம்.எம். குழாய் இணைப்பு – 15 எம்.எம். திருகு குறுங்குழாய் (90 மீட்டர் நீளம் வரை)

ii) 20 mm pipe connection 15 mm Ferrules.(Upto 90 metre length)

மேற்கண்ட இனங்கள் தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதை முடிவு செய்ய தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும். அனைத்து இணைப்புகள், திருகு குறுங்குழாய்கள் (Flow Control Valve) மற்றும் இதர உபகரணங்கள் (accessories) சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப் பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய குழாயின் விட்டம் 15 மி.மீ. அளவிற்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்திய தர நிறுவனத்தின் தரத்தின் குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

In case any other measurement is found necessary only after getting the permission of the Chief Engineer Office of the Commissioner of Municipal Administration, the connections will be given. The flow control valves pipes to be used in all cases should be tested and bear ISI Certificate or should have been approved by Chief Engineer, Office of the Commissioner of Municipal Administration. At any rate, such a measurement should not exceed 15 mm. Such materials used by the Consumers for water connections should be as specified by Engineer and in conformity with the standards of ISI.

8. குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக் குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரின் ஒப்புதலின் பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை, அளவு ஆகியவை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளரால் நிர்ணயம் செய்ததாக இருக்க வேண்டும்.

If the new House Service Connections are at a distance of more than 90 meter from the main pipe connections will be given only on specific permission by the Chief Engineer o/o The Commissioner of Municipal Administration. The nature and measurement of the pipes and the materials used will be approved by the Chief Engineer.

9. (அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகள் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள் யாவையும் நகராட்சி அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளையும் பார்வையிட வசதி செய்து தரவேண்டும். அவ்வாறு பார்வையிட தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாது என்று கருதி குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

9 (a). The pipes and other connections of House Service Connection should be fitted in such a way so as the Municipality Officials or their designated staff to have convenient inspection of the same at all times. The house or occupier should provide all facilities for the inspections. If any hurdles are made, it will lead to disconnection house service connection for the reason of non inspectability.

(ஆ) குடிநீர் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக்கூடாது அல்லது குழாயிலிருந்து சிந்தும் தண்ணீரை மற்றும் வீணாகும் குடிநீர் நகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

b) The tap should be fixed in such a way that it is not submerged in water and the entire system must be in such a way that the spill over water or the wastage of water from the water pipe joins the underground channel or the sewage pipe provided by the Municipality.

10.(அ) அளவுமானிகள் நகராட்சி ஆணையாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக்காரர்களாலோ அல்லது வாடகை தாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். பொருத்தப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும். அளவு மானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்படும்.

10. a) The meters installed in a house connection should have been duly approved by the Municipality Commissioner and should be provided by the owners or the tenants of the house. The meters should always be locked by the Municipality Officers or their authorized officials. The meter readings will be taken every month.

(ஆ) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கி பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.5/– வசூலிக்கப்படும்.

10. b) The meters will be fitted either by the owner or the tenant at their own cost, and a maintenance Rs.5 will be collected every month.

(இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் உரிமையாளர் சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று அளவுமானிகளைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழுதுபார்த்தல் பணியை நகராட்சிப் பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்தரவு பெற்று செய்தல் வேண்டும். மேலும் பழுதுபார்க்கப்பட்ட அளவுமானியை சம்மந்தப்பட்ட பொறுப்பு பொறியாளரிடம் ஒப்படைத்து சரியாக இயங்குகிறதா என ஆய்வு செய்தபின்னரே பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் எவ்வித முன்னறிவிப்புமின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

10. c) If the meters fixed by the owner of the house or the tenant becomes defective then such owner or tenant will arrange for the repair of the meters at his own cost, after getting permission. The repair work shall be done within a period of two months under the Supervision of the Municipality Engineer after getting necessary permission from the Commissioner. The meter after repair should be handed over to the Engineer in charge of the unit Office. Such meters should be functional to the satisfaction of the Unit Engineer and only there after the meters should be fixed up again, Non-compliance with the above condition will entail disconnection of the water supply

(ஈ) அளவுமானி பழுதாகும் சமயங்களில் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 16வது துணை விதியில் வரையறுக்கப்பட்டுள்ள விகிதங்களின்படி குடிநீர் கட்டணங்கள் வசூல் செய்யப்படும்.

10. d) During the period of meter repairs, charges for the supply of water to the house connection will be collected as prescribed under Bye-law No. 16

11. குடிநீர் இணைப்புக்கு வைப்பு தொகை கீழ்கண்டவாறு வசூல் செய்யப்படும்.

<u>நடைமுறைப்படுத்தப்படவுள்ள குடிநீர் வைப்புத் தொகை</u>

<u>(அ) குடியிருப்பு உபயோகம் :</u>

1) <u>500 சதுர அடிக்கு குறைவானது</u> :

வைப்பு தொகை ரூ. 5,000/–

2) <u>501 முதல் 1200 சதுர அடி வரை</u> :

வைப்பு தொகை ரூ. 7,500/–

3) <u>1201 முதல் 2400 சதுர அடி வரை</u> :

வைப்பு தொகை ரூ. 10,000/–

4) <u>2401 சதுர அடிக்கு மேல்</u> :

வைப்பு தொகை ரூ. 15,000/–*

<u>(ஆ) வணிகம் மற்றும் தொழில் சார்ந்த உபயோகம் :</u>

1) <u>500 சதுர அடிக்கு குறைவானது</u> :

வைப்பு தொகை ரூ. 10,000/–

2) <u>501 முதல் 1200 சதுர அடி வரை</u> :

வைப்பு தொகை ரூ.15,000/–

3) <u>1201 முதல் 2400 சதுர அடி வரை</u> :

வைப்பு தொகை ரூ. 20,000/–

4) <u>2401 சதுர அடிக்கு மேல்</u>:

வைப்பு தொகை ரூ. 30,000/–*

மேற்குறிப்பிட்ட வைப்புத்தொகை 2401 சதுர அடி பரப்பளவிற்கான சராசரி தொகையாகும். 2401 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு அதன் பரப்பளவிற்கேற்ப மேற்படி கட்டண விகிதங்களின்அடிப்படையில் வைப்புத் தொகை உயர்த்தப்படவேண்டும்.

இ). நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

11. Security Deposit in advance towards payment of shall be collected in the manner as below person desiring to obtain water connections shall remit the deposit.

**<u>Proposed Deposit amount</u>**

**<u>a) Domestic Purpose :</u>**

**1) <u>Upto 500 sq. feet :</u>**

Deposit Rs. 5,000/-

**2) <u>From 501 to 1200 sq. feet :</u>**

Deposit Rs. 7,500/-

**3) <u>From 1201 to 2400 sq. feet :</u>**

Deposit Rs. 10,000/-

**4) <u>Above 2401 sq. feet :</u>**

Deposit Rs. 15,000/-*

**<u>b) Commercial and Profession Purpose</u> :**

**1) <u>Upto 500 sq. feet :</u>**

Deposit Rs. 10,000/-

**2) <u>From 501 to 1200 sq. feet :</u>**

Deposit Rs. 15,000/-

**3) <u>From 1201 to 2400 sq. feet :</u>**

Deposit Rs. 20,000/-

**4) <u>Above 2401 sq. feet :</u>**

Deposit Rs. 30,000/-*

The above deposits are adopted upto 2401 Sq.ft. buildings. The buildings exeeds 2401 Sq.ft. the deposit shall be increased proportionately to the above plinth areas adopted.

(மாந2) துறை அரசாணை (நிலை) எண்.126, நாள்.28.11.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.15252/2018/பாசாதி–1 , நாள்.10.12.2018 ன் படியும் குடிநீர் கட்டண வைப்புத்தொகை மற்றும் இணைப்பிற்கான கட்டணத்தினை அந்தந்த வீட்டின் சொத்துவரி கேட்புடன் இணைத்து நான்கு சம தவணைகளாக வசூலிக்கப்படும்.

C) As per GO (MS) No.126 Municipal Administration and Water Supply Department dated.28.11.2018 and The Commissioner of Municipal Administration, Chennai Proceedings ROC No.15252/2018/P-1, dated.10.12.2018. The water supply deposit and connection related all charges will be collected along with property tax in four equal installments.

**12. தற்போது நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணம்**

**Proposed Monthly Water tariff amount**

**(அ) குடியிருப்பு உபயோகம் :**

**a) Domestic Purpose :**

**1) 500 சதுர அடிக்கு குறைவானது :**

| | |
|---|---|
| மாதாந்திர கட்டணம் | ரூ. 150/– |
| அளவுமானி கட்டணம் | ரூ. 5/– |
| குடிநீர் மேல் வரி | ரூ. 5/– |

**1) Upto 500 sq. feet :**

| | |
|---|---|
| Monthly charges | Rs.150/- |
| ChargeforMeter | Rs. 5 /- |
| WaterCess | Rs. 5 /- |

**2) 501 முதல் 1200 சதுர அடி வரை :**

| | |
|---|---|
| மாதாந்திர கட்டணம் | ரூ. 180/– |
| அளவுமானி கட்டணம் | ரூ. 5/– |
| குடிநீர் மேல் வரி | ரூ. 5/– |

**2) From 501 to 1200 sq. feet :**

| | |
|---|---|
| Monthly charges | Rs.180/- |
| ChargeforMeter | Rs.5 /- |
| WaterCess | Rs.5 /- |

**3) 1201 முதல் 2400 சதுர அடி வரை :**

| | |
|---|---|
| மாதாந்திர கட்டணம் | ரூ.210/– |
| அளவுமானி கட்டணம் | ரூ.5/– |
| குடிநீர் மேல் வரி | ரூ.5/– |

**3) From 1201 to 2400 sq. feet :**

| | |
|---|---|
| Monthly charges | Rs. 210/- |
| ChargeforMeter | Rs. 5 /- |
| WaterCess | Rs. 5 /- |

**4) 2401 சதுர அடிக்கு மேல் :**

| | |
|---|---|
| மாதாந்திர கட்டணம் | ரூ. 270/– |
| அளவுமானி கட்டணம் | ரூ.5/– |
| குடிநீர் மேல் வரி | ரூ. 5/– |

**4) Above 2401 sq. feet :**

| | |
|---|---|
| Monthly charges | Rs. 270/- |
| ChargeforMeter | Rs. 5 /- |
| WaterCess | Rs. 5 /- |

(ஆ) வணிகம் மற்றும் தொழில் சார்ந்த உபயோகம் :

1) 500 சதுர அடிக்கு குறைவானது :

| | |
|---|---|
| மாதாந்திர கட்டணம் | ரூ. 450/– |
| அளவுமானி கட்டணம் | ரூ.5/– |
| குடிநீர் மேல் வரி | ரூ.5/– |

2) 501 முதல் 1200 சதுர அடி வரை :

| | |
|---|---|
| மாதாந்திர கட்டணம் | ரூ. 540/– |
| அளவுமானி கட்டணம் | ரூ.5/– |
| குடிநீர் மேல் வரி | ரூ.5/– |

3) 1201 முதல் 2400 சதுர அடி வரை :

| | |
|---|---|
| மாதாந்திர கட்டணம் | ரூ.630/– |
| அளவுமானி கட்டணம் | ரூ.5/– |
| குடிநீர் மேல் வரி | ரூ.5/– |

4) 2401 சதுர அடிக்கு மேல் :

| | |
|---|---|
| மாதாந்திர கட்டணம் | ரூ.810/– |
| அளவுமானி கட்டணம் | ரூ.5/– |
| குடிநீர் மேல் வரி | ரூ. 5/– |

மேற்குறிப்பிட்ட தொகை 2401 சதுர அடி பரப்பளவிற்கான சராசரி தொகையாகும். 2401 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு அதன் பரப்பளவிற்கேற்ப மேற்படி கட்டண விகிதங்களின் அடிப்படையில் கட்டணங்கள் உயர்த்தப்படவேண்டும்.

13 (அ) பரப்பளவு முறையிலான கட்டணத்தை, குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு திங்களும் 10ம் தேதிக்குள் அனுப்பும் குடிநீர் கட்டண கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய திங்களில் (ஏப்ரல், ஜீலை, அக்டோபர் மற்றும் ஜனவரி மாதங்களில்) உபயோகிக்கப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

b) Commercial and Profession Purpose :

1) Upto 500 sq. feet :

| | |
|---|---|
| Monthly charges | Rs. 450/- |
| ChargeforMeter | Rs. 5 /- |
| WaterCess | Rs. 5 /- |

2) From 501 to 1200 sq. feet :

| | |
|---|---|
| Monthly charges | Rs. 540/- |
| ChargeforMeter | Rs. 5 /- |
| WaterCess | Rs. 5 /- |

3) From 1201 to 2400 sq. feet :

| | |
|---|---|
| Monthly charges | Rs. 630/- |
| ChargeforMeter | Rs. 5 /- |
| WaterCess | Rs. 5 /- |

4) Above 2401 sq. feet :

| | |
|---|---|
| Monthly charges | Rs. 810/- |
| ChargeforMeter | Rs. 5 /- |
| WaterCess | Rs. 5 /- |

The above rates are adopted upto 2401 Sq.ft. buildings. The buildings exeeds 2401 Sq.ft. the Tariff shall be increased proportionately to the above plinth areas adopted.

13. a) The water consumption charges as per meter reading should be remitted into the Municipality Treasury within 15 days from the date receipt of demand notice. The demand notice sent before 10th of April, July, October and January Months will be for the water consumption of previous Quarter

(ஆ) மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமானாலும் இணைப்பை துண்டிக்க அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் குடிநீர் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் ஒவ்வொரு திங்களுக்கும் ரூ.100/– அபராத கட்டணமாக வசூலிக்கப்படும். துண்டிப்பு செய்யும் பட்சத்தில் ஏற்படும் சகல இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் நகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல. குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளரே இதற்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

13. b) If the water charges are not remitted within the time prescribed under the bye-law above mentioned, the Commissioner of the Municipality is empowered to collect Rs.100/- as penalty per Quater and disconnect the water supply at any time. The Municipal Commissioner will not be liable for any loss or damage on account of such disconnection of water supply, the tenant or the owner of the house alone is responsible.

(இ) இந்தத் துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகள் பின்பற்றி வசூல் செய்யப்படும்.

13. c) If the charges for the drinking water supply are not remitted within the period prescribed under the bye-law above mentioned the same will be collected in the manner provided under the rules for the collection of property tax.

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் கட்டணம் குறிப்பிட்ட காலத்தில் செலுத்தாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணமாக ரூ.750/–ம் மறு இணைப்பு கட்டணம் ரூ.750/–ஆக மொத்தம் ரூ.1500/–ஐ வசூல் செய்யப்படும். இத்தொகை கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக நகராட்சியில் செலுத்த வேண்டும்.

13. d) In each case of disconnection of water supply, due to non-payment of water charges, a sum of Rs.750 towards disconnection and another sum of Rs.750 for reconnection of water supply (totally Rs.1500/-) will be collected along with the water consumption charges or the same should be remitted separately to the Municipality.

உ) குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்குள் நிலுவையின்றி குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தி மறு இணைப்பை பெற்றுக் கொள்ளத் தவறினால் குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்பட்டதாக கருதப்படும்.

13. e) In case of failure to get reconnection of water supply within a period of one year from the date of disconnection, the water connection will be construed as permanently disconnected.

14. குடிநீர் உபயோகப்படுத்தாத ஒரு காலாண்டின் பகுதிக்கான குடிநீர் கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப் படமாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தபடாமலிருக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டணத் தள்ளுபடி வழங்கலாம். ஆனால் இந்த குடிநீர் இணைப்பை வீட்டு உரிமைதாரர் வேண்டுகோளின்படி தற்காலிகமாக துண்டிப்பு செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு துண்டிக்கப்படும் போது

14. If for any portion of the quarter of the year, the water is not utilized, there will not be any proportionate remission of water charges. If for the entire period of the quarter of the year water is not used, the Commissioner has powers for remission of the charges, but the Commissioner must be duly informed about the non-use of the water in

துண்டிப்பு கட்டணமாக ரூ.750/—ம் மறு இணைப்புக் கட்டணமாக ரூ.750/—ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

advance, by a written communication and the water supply disconnected temporarily. In such a case a sum of Rs.750/- for disconnection and another sum of Rs.750/- for reconnection will be collected every time.

**குறிப்பு : இந்த துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள காலாண்டு என்பது மூன்று முழு நாளிட்ட திங்கள் அல்லது 90 நாட்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.**

**Note: The quarter of the year referred to in the above bye-laws means 3 months or 90 days.**

**15.** (அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் 30 நாட்களுக்குள் ரூ.100/— வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்துமூலம் நகராட்சிக்கு அறிவிப்பு செய்ய வேண்டும்.

15. A) If the meter shows wrong reading or the meter itself becomes defective the consumer should inform the authorities in writing with full details of the defects and a sum of Rs.100/- should be deposited within a period of 4 weeks or 30 days from the date of noting the readings in the meter.

(ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

15. B) Complaints received beyond the above prescribed period of time or without accompanying by deposit will not be considered.

(இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்குப் பின் தெரிய வந்தால் வைப்புத் தொகை திரும்பத் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

15. C) If during inspection it was found out that there is difference in the readings due to the defect in meter, the deposit amount already collected will be refunded. If it was found out that meter was showing correct reading or the meter was not defective the deposit amount will be forfeited.

**16.** குழாய் இணைப்பில் உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒரு வார காலத்திற்கு மேலாகப் பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளின் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத நேர்வுகளின் ஆணையர் மிகப் பொருத்தமானது எனக் கருதும் புள்ளி விவரங்களின் அளவுகள் அந்தப் பிரச்சனைக்குரிய மேற்கண்ட கால கட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில்

16. If the meter fitted to the house connection showed defective reading or the meter was found defective for more than a week then in such a case the meter reading recorded during the corresponding month of the previous year will be taken into consideration for assessing the charges of water connection for the period in question. If such particulars could not be ascertainable the Commissioner can determine the quantum of water on the basis of statistics gathered and considered fit and the charges will be assessed and collected, based on the

உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாகக் கருதப்பட்டு கணக்கிடப்படும். இது குறித்து ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

above quantum. The decision of the Commissioner will be final.

18. குடிநீர் குழாய்களை தொட்டி அல்லது சேமிப்பு தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24க்கு பொருந்தாது.

18. The pipe carrying water to the house connection should not be directly linked to the water pit or the storage tank. This will not apply in the case of connection under bye-laws 23 and 24.

19. ஒவ்வாரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் நகராட்சியிலிருந்து குடிநீர் குழாய் இணைப்பு பெற்று இருந்தால் அதை நல்லமுறையில் வைத்துக்கொள்ள வேண்டியது. பழுது ஏற்பட்டால் நகராட்சியின் உரிய அனுமதி பெற்று அவருடைய சொந்த செலவில் இப்பழுதினை செய்துக்கொள்ள வேண்டும்.

19. The owner of the house or its tenant having the water connection to the house should maintain the same in perfect good condition. Any defect in the system should be rectified at the cost of the owner or tenant in the presence of Municipality Officials. Centage charges shall be paid based on the amount of the estimate for the repairs.

20. குடிநீர் குழாயின் நிலையை பரிசோதனை செய்யும்பொருட்டு அந்தக் குடிநீர் குழாயின் இணைப்பினை ஆணையர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும்போதோ அல்லது வேறு காரணங்களினாலோ குழாய்கள் அல்லது அவற்றின் இணைப்புகளோ பழுதுபட்டு இருந்தால் இதை பழுது நீக்குவதற்கோ அல்லது புதிய இணைப்புகளில் பொருத்துவதற்கோ சரி செய்வதற்கோ குடியிருப்பில் உள்ள உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கும் ஒரு திங்கள் காலவரை கொடுத்து ஆணையாளரால் ஒரு அறிவிப்பு கொடுக்கப்படும். அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காலவரையறைக்குள் பழுது நீக்கப்படவில்லை என்றாலும், இணைப்புகளை சரி செய்யப்படவில்லை என்று தெரியவருமேயானாலும், பழுது காரணமாக இணைப்புகளில் நீர் விரையமாகும் அல்லது குடிநீர் தூய்மை கெடும் எனக் கருதினால் ஆணையர் இந்தக் குழாய் இணைப்புகளையும் மற்ற இதர பணிகளையும் நகராட்சி பணியாளர்கள் மூலம் முடித்து அதற்காகும் செலவினை வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்போரிடம் இருந்து வசூல் செய்யப்படும். அவ்வாறு இல்லையென்றால் இணைப்பை துண்டிப்பு செய்துவிட்டு இணைப்பிற்கு நீர் வழங்குவதை நிறுத்தம் செய்யலாம்.

20. The Commissioner (or) the persons authorized by Commissioner is empowered to remove the water pipe or other connections to the house connection for examining the condition of the connection. If the pipes or other connections are found to be defective, the Commissioner will give a notice of one month’s time for rectifying the defect, or putting new pipes in the place of defective ones. If the defect is not rectified within the time granted by the Commissioner or if it comes to the notice of the Commissioner, that there will be wastage of drinking water or the purity of the water is likely to be spoiled, the Commissioner can get the defect rectified through the Municipality officials and recover the cost from the owner of the house or tenant or the Commissioner can cause stoppage of water to the house connection, after disconnection of the water supply.

21. வீட்டு பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுக் குழாய் இணைப்பிலிருந்து கிடைக்கும் குடிநீரை ஆணையரின் எழுத்து மூலமாக முன் அனுமதியின்றி குடும்பப் பயன்கள் அல்லாத பிற காரியங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் குடும்ப பயன்களுக்கான குடிநீரை அவையல்லாத பிறவற்றிற்கு பயன்படுத்துவதாக ஆணையர் அறிய வந்தாலும் அல்லது அவ்வாறு நம்புவதற்கு காரணங்கள் இருந்தாலும் அவர்தாம் அறிவிக்கும் நாளிலிருந்து துணை விதி 12ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்ப பயன்களுக்கு அல்லாத விதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு உரியவரை தன்னுடைய ஆதாரப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர் செலுத்த தவறினால் அந்த வீட்டிணைப்பை துண்டித்துவிட ஆணையர் உத்தரவிடலாம்.

21. The water supplied from the tap connection for domestic use should not be used for any other purpose without the written prior permission of the Commissioner. If such use by the owner of the house or the tanent comes to the knowledge of the Commissioner or the Commissioner has reason to believe in the existence of such use he can ask the person concerned to pay the charges under bye-laws No.12 for use of water other than domestic purpose as per the particulars gathered by him from a particular date, and if the owner of the house or tenant fails pay the said charges, the Commissioner can order the disconnection of the water supply.

22. அ) நகராட்சியில் இருந்து பெறப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்று குழாய் அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்பு குழாய் அல்லது அசையும் குழாய் அது போன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரும் குழாயில் இருந்து குடிநீர் ஈர்க்கக்கூடாது. அவ்வாறு ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் யாதும் திருப்பி தரப்படமாட்டாது. மீண்டும் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்த மாட்டேன் என்ற உத்தரவாதத்துடன் ரூ.5000/– அபாரத்தொகை பெற்றுக் கொண்ட பின்பு தான் இணைப்பு வழங்கப்படும்.

22. a) Taking water by means of a mechanical device through a pipe or through any electrical motor from the mains is prohibited. If such a device is found out the house connection will not only be disconnected but also the electrical motor or other mechanical device will be confiscated and such articles will not be returned on any account. Reconnection will be given only on payment of Rs.5000/- as fine, along with an undertaking that such devices will not be fitted in future. Apart from the owner or occupier of the house should also pay additional fine amount equivalent to six/half yearly (3 years) total water charges.

ஆ)இரண்டாவது தடவையாக குடிநீர் இணைப்புகளில் மின்கருவிகளை வைத்து குடிநீர் ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

b) Repetition of use of such mechanical or electrical device, for pumping out water will entail permanent disconnection of the water supply connection. Action will also be taken in a Court of law.

இ) குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்திருப்பதுடன், வெளி செல்லும் கழிவுநீரை வெளியேற்ற புதை வடிகாலுக்கான

c) All the applicants requesting drinking water supply connection should make arrangements for the harvest of rain water and also apply for underground

விண்ணப்பத்தை விண்ணப்பித்து நகராட்சி தெரிவிக்கும் வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை செலுத்தி புதை வடிகால் இணைப்பும் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் விண்ணப்பிக்கும் பகுதியில் இத்திட்டம் இல்லாதிருந்தால் வெளியேறும் கழிவுநீரை தனியாக தொட்டி (cess pool) அமைக்க வேண்டும்.

drainage connection by remitting the necessary deposit amounts and other amounts for linking the flow of wastage water to underground drainage channel. In case underground drainage system is not implemented in these parts of the area,the waste water to be collected in a cess pool to the satisfaction of the Commissioner.

**23.** பொதுக் கழிப்பிடம், சிறுநீர் கழிக்குமிடம், ஆகியவற்றிற்கு குடிநீரின் குழாயிலிருந்து இணைப்புக் கொடுக்கப்பட வேண்டுமானால் இதற்காக ஒரு தொட்டியை அமைத்து அதற்குத் தேவையான உபகரணங்களுடன் பொருத்தி நகராட்சி பொறியாளர் முடிவு செய்யுமிடத்தில் நிறுவப்பட வேண்டும்.

23. If any water connection is requested from the drinking water pipe for the public convenience, toilets and urinals, a separate storage pit with necessary implements must be installed in the place fixed by the Municipality Engineer.

**24.** கொதிகலன்களுக்கு நகராட்சியின் பகிர்மான குழாய்களிலிருந்து தேவைப்படுமானால் அதற்காக தனியாக தொட்டியிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்து திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அணுகி ஆய்வு செய்வதற்கு தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.

24. No direct connection from the main distribution pipe line of Municipality will be granted for the boilers. Water should be taken only from the storage tank specially constructed for the purpose. For every such constructed tank there shall be separate ball (float) tap, watch/alarm device and should be put in such a way as to facilitate easy inspection by the Municipality Officials.

**25.** தீ விபத்து நேரிடும் சமயங்களைத் தவிர மற்ற சமயங்களில் நகராட்சியின் ஆணையர் பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாமல் பிரதானக் குழாய் அல்லது பகிர்மானக் குழாய்கள், திறப்பான்கள் தீயணைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் நீர்க் கருவிகள் அவற்றை நிறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்துதல் கூடாது.

25. Except during the time of fire accident, persons without any permission from the Commissioner/ Engineer are prohibited to operating the main pipe line or the ferrules at the water distribution point and the fire hydrant.

**26.** ஆணையர் அவர்கள் உத்தரவின்பேரில் திருமணம் மற்றும் இதர சந்தர்ப்பங்களில் ஒரு கட்டிடத்திற்கு தற்காலிகமாக இணைப்புகள் வழங்கப்படும். இந்த இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிகளில் ரூ.3,000/– பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ.2,000/–ம் மனுதாரர் செலுத்த வேண்டும். அதை திரும்பத் துண்டிக்கும்போது ரூ.500/–ம் கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்பு 15 எம்.எம் அளவுள்ள சேதமற்ற குழாய் ஒன்று 3 மீட்டர் கொண்டதாக இருக்கும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்புகளுக்கு இணைப்பு கேட்டவர்களோ அல்லது அவ்வாறு தற்காலிகமாக இணைப்பு கொடுக்கப்படும் கட்டிடத்தின் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்வதற்கு தேவையான பொருட்கள் மற்றும் இதர உபகரணங்¦கள் அவர்கள் பொறுப்பிலும், செலவிலும் தருவித்து செய்துகொள்ள வேண்டும். கூடுதலாக குழாய்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாய்க்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.100/– வீதம் வசூல் செய்யப்படும் மேற்படி தற்காலிக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

26. Under orders from the Municipal Commissioner temporary water connection can be given to the buildings for marriage and other functions. For such extensions of water supply a sum of Rs.3000/- per day or a portion of a day will be collected. In addition to that Rs.2000/- will be collected for connection from the main pipe line. Another Rs.250/- will be collected for disconnection of the supply. Such an extension will have a 15 mm main pipe of two meters length. Such water connection will be temporary and for these temporary extensions the applicant should provide the necessary materials and other implements at their own cost. If additional pipes are required a sum of Rs.100/- for a day or part thereof for every additional pipe fitting will collected. Such temporary connection shall not exceed 5 days at a given time.

**27.(அ)** குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட அளவுமானியில் வைக்கப்பட்டுள்ள முத்திரை நீக்கவோ அல்லது பூட்டை உடைக்கவோ அல்லது அளவுமானியில் பொருத்தப்பட்ட கண்ணாடியை சேதம் செய்யவோ அல்லது அதன்மீது உள்ள குறிப்பை மாற்றவோ அல்லது அளவுமானி கணக்கிடும் நீரின் அளவை பதிவு செய்யும் பகுதியை தடை செய்யவோ யாதொருவரும் முற்படக்கூடாது.

27.(A). Tampering with the seal over the meter or break open the lock put on the meter or tampering with the glass fixed on the meter or open or alter the note in the meter or interfere in any way with the recording of the quantity of water used from the meter are all prohibited.

(ஆ) குடிநீர் வழங்கும் அளவுமானி கருவி பதிவு செய்வதற்கு முன்னால் குடிநீரை எடுக்கும் முறையை தவிர்க்க வேண்டும்.

27. B The practice of taking water from the supply connection prior to the fixation of meter should be avoided.

(இ) அளவுமானி அளவு பதிவு செய்வதைத் தடுக்க அளவுமானியை சேதப்படுத்தவோ அல்லது அளவுமானியை களவாடிச் செல்வதையே அனுமதிக்கப்படமாட்டாது அல்லது அதற்கு காரணமாக இருத்தல் கூடாது.

27.C) Any interference with a view to prevent the functioning of meter reading by causing damage to the meter or removing it from the spot by theft will not be permitted. The consumer should not be a cause for such incidences.

**28.** (அ) இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்காக கொடுக்கப்படும் இணைப்புகளுக்கும் இவை பொருந்தும் எனவும் துணை விதிகளின்படி மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்கள் பொருந்தும். அவ்வாறு உள்ள வீட்டு இணைப்புகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டடணங்களையும் குடியருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டால் வீட்டு இணைப்புகள் அதிகாரபூர்வமாக செல்லத்தக்கதாய் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகள் நகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாய் கருதப்பட்டு வீட்டு உபயோக இணைப்புகளுக்கு அபராத தொகையாக நாளொன்றுக்கு ரூ.3000/– குடியிருப்பு இல்லாத வணிகம் மற்றும் தொழிற்சாலை இணைப்புக்கு நாளொன்றுக்கு ரூ.6,000/– வீதம் வசூல் செய்யப்படும். தொடர்ந்து குற்றம் செய்யப்படும் பட்சத்தில் குழாய் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்படும்.

28. A). These by-laws will be applicable to all the existing water connections including non domestic and Industrial also. If the tenant or the owner of the house undertakes to pay all the charges payable to the Municipality, such connections will be declared as legally recognized, under the new scheme. If such charges are not paid such existing connection will be declared as unrecognized connection and water connection will be permanently disconnected.

(ஆ) குடிநீர் இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள் திருத்தப்பட்ட துணை விதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லத்தக்கவை ஆகாது.

28. B) The rules and regulations which were followed for the water connections will cease to be operative from the date when the amended bye-laws come into force.

(இ) புதிதாக குடிநீர் இணைப்பு பெற விரும்புகிறவர்கள் நகராட்சிக்கு நடப்பு நிதியாண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள், வரியில்லா இனங்கள் ஆகியவைகளை செலுத்தி அதற்கான இரசீது நகல்கள் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

28. C) Those who want to have new water supply connection should pay all the taxes and other non-tax dues till the close of the current financial year and enclose the copy of the receipts, along with the application. They only the application will be taken up for consideration.

**29.** குடிநீர் வழங்கும் ஆதாரத்தில் நீர் பற்றாக்குறை இருப்பதாலோ அல்லது குடிநீர் வீட்டு உபயோக பயனுக்காகவோ அல்லது பிற காரியங்களுக்காகவோ வழங்கப்படும் குடிநீர் தவறுதலாக பயன்படுத்துவதற்காகவோ அல்லது இணைப்புகள் வேண்டுமென்றே

29. If there is any deficiency of water in a storage point of the distribution of water or if that it comes to the notice of the Municipality authorities drinking water intended for domestic or non-domestic purposes has been put to wrong use or if

பழுதாக்கப்படுகிறது என்று நகர்மன்றத்திற்கு தெரியவந்தாலோ 24 மணி நேர அவகாச எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து இணைப்பை துண்டிக்கும் உரிமை நகராட்சி ஆணையாளர் அல்லது மன்றத்துக்கு உண்டு. இத்தகைய சமயங்களில் ஏற்படும் எந்த இழப்பிற்கும் நஷ்டத்திற்கும் நகராட்சி மன்றமோ அல்லது ஆணையாளரோ பொறுப்பு அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

such water supply connections were deliberately damaged then the Municipality Commissioner has a right to disconnect the supply on 24 hours notice. The Municipality Council or the Commissioner will not in any way be responsible for the loss or inconvenience caused in this connections.

30. ஒவ்வொரு இணைப்பின் தகுதியையொட்டி தலைமைப் பொறியாளர். நகராட்சி நிர்வாக ஆணையரகம் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையில் அரசினருக்கு உரிமையான ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய எல்லா நிறுவனங்களுக்கும் இத்துணை விதிகள் பொருந்தும்.

30. The above bye-laws will also apply to the water supply connections to the establishments controlled and administered by the Government on the basis of the recommendation of the Chief Engineer, Office of the Commissioner of Municipal Administration.

31. துணை விதி 22 தவிர மேற்சொன்ன விதிகளை மீறும் அல்லது சேதமிழைக்கும் நபர் எவரும் கீழ்க்கண்டவாறு தண்டனை பெறத்தக்கவராவர். ரூ.5,000/– வரை அபராதமாக தொடர்ந்து செய்யப்படும் குற்றத்தை நிறுத்துமாறு எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் தொடர்ந்து செய்யப்படுமானால், தொடர் அபாரதமாக நாள் ஒன்றுக்கு ரூ.500/– விதிக்கப்படும். மீண்டும் அதே குற்றம் இழைப்படுமானால் குழாய் இணைப்பு துண்டிப்பதுடன் நீதித்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்

31. Who ever violates the above bye-laws or causes damage will be liable for punishment as shown below:-

1) A sum of Rs. 5000/- will be fined with a warning notice to stop further violation or damage; if in spite of such a warning notice such an act continues to be done then a daily recurring fine of Rs.500/- will be imposed. If the crime is continued, water connection will be disconnected and necessary action will be taken through the court of Law.

32. குடிநீர் குழாய் இணைப்பு தேவைப்படுவோர் படிவத்தை (படிவம்/அ) ரூ.100/– நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்,

32. The applicant who requires house connection should pay Rs.100 in the Municipality Treasury and get the Form A.

**<u>தண்டனை</u>**

இந்த துணை விதிகளில் ஏதேனும் ஒன்றை மீறி நடப்பவர் எவராயினும் மேலும் ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையை தன் பொறுப்பிலே கொண்ட எவரும் அக்குழந்தை மேற்கண்ட துணை விதிகளை மீறி நடக்காமல் தடுத்து நிறுத்தத் தவறினாலும், அவர் தண்டனைக்கு உரியவர் என கருதப்படுவார். அவருக்கு ரூ. 5000/– வரையிலும் அபராதம் வசூலிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணை விதிகளை தொடர்ந்து மீறப்படுமானால் நாளொன்றுக்கு ரூ. 500/– தொடர் அபராதமாக விதிக்கப்படும்.

**Penalty:**

Violation of any bye-laws above mentioned by any person or by a child under 7 years, under the custody of a person and such person having control over the child, will be liable to a penalty upto Rs.5000 and if the violation is a continuous affair, the penalty of Rs.500/- for each day will be inflicted and collected

2. பொது குடிநீர் குழாய்க்கான துணை விதிகள்.

1. எவரும் பொதுக் குடிநீர் குழாய் இணைப்புகளில் இருந்தோ, தீ அணைப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புகளில் இருந்தோ, வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ குடிநீர் வெளியேறி வீணாக செல்லும்படியான நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது.

2.(அ) எவரும் 30 லிட்டர் கொள்ளளவிற்கு மேற்படாத பாத்திரங்களால் அன்றி வேறொன்றிலும் குடிநீர் குழாயில் இருந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

(ஆ) குடும்பப் பயன்களுக்காக அன்றி பிற உபயோகங்களுக்கு பொது குடிநீர் குழாயிலிருந்து குடிநீர் பிடிக்கக்கூடாது.

(இ) பொது குடிநீர் குழாயிலோ அல்லது கால்நடைகளுக்காக அமைக்கப் பட்டிருக்கும் தொட்டியில் எவரும் குளிப்பதோ, துணிகள் துவைப்பதோ, வண்டிகள் கழுவுவதோ, பிராணிகளை குளிப்பாட்டுவதோ கூடாது.

(ஈ) மற்றவர்கள் காத்திருக்கையில் பொது குடிநீர் குழாயில் இருந்து ஒருவர் ஒருமுறைக்கு மேல் தொடர்ந்து குடிநீர் பிடித்தல் கூடாது.

3. விபத்து நேரிட்ட காலங்களில் தீ அணைப்பிற்கு இன்றி பிற காரியங்களுக்காக எவரும் தீ அணைப்புக்காக பொருத்தப்பட்டுள்ள குழாய் இணைப்பில் இருந்து நீர் எடுத்தல் கூடாது.

4. தீ விபத்தின் போது தீயை அணைப்பதற்காக அன்றி மற்றபடி எவரும் பொதுக் குடிநீர் குழாயில் இருந்தோ தீ அணைப்புக் குழாயில் இருந்தோ தொடர்ந்து நீர் எடுக்கும் வகையில் அவைகளை இயக்கக் கூடாது. இவ்வாறு தீயணைப்புக் காக அன்றி பிற உபயோகங்களுக்காக பொது குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாயில் இருந்து சுயநல அடிப்படையோடு தொடர்ந்து ஒருவரால் குடிநீர் எடுக்கப்பட்டால் அவர் துணை விதிகளை மீறி நடந்ததாக கருதப்படுவதுடன் நகராட்சிகளின் சட்ட விதிகளின்படியும் அவர்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள நபர்களை பொதுக்குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக்குழாய் இவற்றை பயன்படுத்தக் கூடாது.

## 2. Public Fountains By laws

1. No member of the public will allow wastage of drinking water from the public drinking pipe connection of the fire hydrant, deliberately or by negligence by act.

2. a) No member of the public will be allowed to take drinking water in a container capable of holding a quantity exceeding 30 liters.

b) Water must be taken only for domestic purposes and for no other purpose.

c) No member of the public will be allowed to take bath, wash clothes, clean carts, bath animals in public tap or storage pit intended for the use of cattle.

d) When others are waiting in queue, one person cannot take water from the public tap more than once continuously.

3. During the time of fire accident only, water can be taken from the hydrant for putting out fire and water should not be taken from fire hydrant for other purposes.

4. Water can be taken from the public tap or from the fire hydrant only during the fire accident and for no other purpose such water can be utilized. If water from the public tap or fire hydrant is continuously taken for selfish purpose the person will be subjected to legal action under the provisions of the Municipality Act and the court of law.

5. No person having contagious or loathsome disease will be permitted to use the public tap or fire hydrant.

6. அருவருக்கத்தக்க நோய் அல்லது விரைவில் பரவக்கூடிய நோய் உள்ள பிராணிகளை அல்லது மேற்சொன்ன நோய்களால் ஏதாவது ஒரு நோய்ப் பற்றக்கூடும் என்றும் அவருக்குத் தோன்றக்கூடிய அல்லது அவருக்கு தெரிந்திருக்கக்கூடிய பிராணிகளை பொதுக் குடிநீர் குழாய் அல்லது தீயணைப்புக் குழாய் இவற்றின் அருகே கொண்டு செல்லக்கூடாது.

6. Animals having loathsome disease or having disease which easily spreads or any other contagious disease should not be taken near the public tap or fire hydrant.

7. பொதுக் குடிநீர் குழாய் அல்லது தீயணைப்பு குழாய் ஆகியவற்றைச் சுற்றி எவரும் அசுத்தம் செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் நகராட்சிகளின் சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

7. No person can cause nuisance around the area or public tap or fire hydrant. Such lapses if found out will be booked under the Municipality Act and legal action will be taken.

8. தீ விபத்து நேரும்போது தவிர மற்ற தருணங்களில் ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்படாத எவரும் குடிநீர் தேங்கும் பிரதான குழாய் பகிர்மான குழாயில் உள்ள தடுக்கிதழ்கள் தீயணைப்பு குழாய் அல்லது நகர்மன்றம் குடிநீர்த் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பொதுக் குழாய் ஆகியவற்றிலிருந்து நீர் உறிஞ்சவோ அவைகளுக்கு சேதம் விளைவிக்கவோ கூடாது.

8. Except during fire accident, no person will be permitted to take water from the main supply pipe line or distribution line on from the fire hydrant source of from the public tap connected to the Municipality water supply scheme or cause any damage to the same, except the persons permitted by the Commissioner.

9. பொதுக் குடிநீர் குழாய் அமைக்கும் இடத்தைச் சுற்றி வரிசைகள் போடுவதோ வரிசைக்காக உடைத்த குடங்கள், டப்பாக்கள் மற்றும் இதர பொருட்கள் வைக்கக் கூடாது. பொதுக் குடிநீர் குழாயில் குடங்களை கழுவி குடிநீரை வீணாக்கக் கூடாது.

9. Around the public tap no pot or other containers shall be placed in queues. It is also prohibited to waste the water by washing the pots.

**அலுவலக குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 936**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு பதிவு செய்யப்பட்டது**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.